பழந்தமிழர் உணவு, உடை, இருப்பிடம் மூலம் கற்றுக்கொண்ட வாழ்வியல் பாடங்கள்

முனைவர் அ. வெலிங்டன் பிரான்சிஸ் பிரபாகர்
தமிழ்த்துறைத் தலைவர் (ப.நி),
போப் கல்லூரி (தன்னாட்சி), சாயர்புரம், தூத்துக்குடி
DOI: https://doi.org/10.5281/zenodo.19220400

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பழந்தமிழர் இயற்கையோடு இயைந்து வாழ்ந்துள்ளனர். இதனைச்சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் நமக்கு எடுத்து இயம்புகின்றன. தங்கள் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் இவற்றின் மூலம் தங்கள் வாழ்க்கைப் பாடங்களைப் படித்துள்ளனர். அவற்றுள் சிலவற்றை இங்குக் காண்போம்.

உணவு

வெப்ப நாட்டில் வாழ்ந்த பழந்தமிழர் உடல்சூட்டைத்தணிக்கும்அரிசிஉணவைத் தங்கள் பிரதான உணவாகத் தேர்ந்தெடுத்துள்ளனர். அந்த உணவை விளையச் செய்யும் மழை மேகமான கார்மேகத்தை "எழிலி" என்றனர். தங்கள் வானவியல் அறிவின் மூலம், வடக்கே வெள்ளி உதித்தால் அந்த எழிலி வந்து பெருமழையாகக் கொட்டும் என்று கண்டுபிடித்தனர். இதனைப்பதிற்றுப்பத்தின் மூன்றாம் பத்து 24-ஆம் பாடல் தெளிவுறுத்துகிறது. ஆனால், அந்த வெள்ளி தென்திசையில் உதித்தால் பருவமழை பெய்யாது பஞ்சம் உண்டாகும் என்பதைப் புறநானூறும் (35), பட்டினப்பாலையும் (1-6) குறித்துள்ளன. இப்படித் தங்கள் வயிற்றுப் பசியைப்போக்கும், உணவை விளையச் செய்யும் மழை எப்போது வரும் என்பதைக் கண்ட பழந்தமிழர், அரண்மனை நிலா முற்றத்தில் மீன் வாய் போன்று பகுக்கப்பட்ட வாயையுடைய நீர்ப்பந்தல் நிறைவதன் மூலம் எவ்வளவு மழை பெய்துள்ளது என்பதையும் அளந்தனர் என்று நெடுநல்வாடை பகர்கின்றது. இப்படி உணவை விளையச்செய்யும் மழையைப் பழந்தமிழர் அளந்து அறிந்தனர். அது மட்டுமில்லாமல், இந்த உணவின் மூலமே தனக்கு வரப்போகும் கணவனின் அன்பின் ஆழத்தையும் அளந்து அறிந்துள்ளனர்.

எச்சில் உணவு

கபிலர் இயற்றிய குறிஞ்சிப்பாட்டின் தலைவியின் உயிரை ஒரு யானையிடமிருந்து காப்பாற்றினான் தலைவன். இருவரும் தங்கள் முதல் சந்திப்பிலேயே "களிறு தரு புணர்ச்சியில்" வீழ்ந்து கிடக்கும் வேளையில் தலைவன் தலைவியைப் பார்த்து,

"மலரத் திறந்த வாயில் பலர்உண
பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலி அடிசில்
வசை இல் வான்திணைப் புரையோர்
கடும்பொடு
விருந்து உண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னோடு உண்டலும் புரைவது என்று ஆங்கு"

என்று கூறினான். இதைக் கேட்ட தலைவி, சீ போ நான் உன் வீட்டிற்கு வந்து விருந்தினர் உண்ட பின் உள்ள எச்சில் உணவையா நான் உண்ண வேண்டும் என்று கூறாமல், இவனல்லவோ ஆண்களில் தலைமகன், இவனல்லவோ உத்தமபுருஷன், இவனல்லவோ அன்பில் சிறந்தவன் என்பதைக் கண்டு, தன் வீட்டிற்கு வந்த விருந்தினர்களையே இப்படித் தாங்கு தாங்கு என்று இவன் தாங்கினால் தன்னையேநம்பிவந்ததன்அன்புமனைவியை எப்படித் தாங்குவான் என்பதை அறிந்து கொள்கிறாள். இவனே தன் கணவனாக

வரத்தகுதியுடையவன் என்பதைக் கண்டு கொள்கிறாள். இப்படி ஒரு பழந்தமிழச்சி தனக்கு வரப்போகும் கணவனின் அன்பின் ஆழத்தையும், நல்மனதையும், "ஓர் எச்சில் உணவின்" மூலம் அளந்து விடுகிறான். இவளல்லவா நல்ல வாழ்க்கைத் துணையை அளக்கும் கருவியைக் கண்டு பிடித்த தமிழ் விஞ்ஞானி எனலாம்.

உடை

உடல் சூட்டைத் தணிக்கும் உணவை உட்கொண்ட பழந்தமிழர், உடலுக்கு உகந்ததாயும், சூழ்நிலைக்கேற்றதாயும், உடல் வெப்பத்தைத் தணிக்கும் ஆடைகளையே அணிந்துள்ளனர். பகலில் சூரியனின் வெப்பத்தைப் பிரதிபலிக்கின்ற பட்டாடைகளையும், இரவில் குளிர்ச்சியைத் தரும் பருத்தி ஆடைகளையும் மகளிர் அணிந்தனர் என பட்டினப்பாலை *(106, 107)* சொல்லுகிறது. கணவன் வீட்டிலிருக்கும் போதும், விழாக்காலங்களிலும் மகளிர் பூ வேலைப்பாடு கொண்ட வண்ண ஆடைகளை அணிந்தனர் என்று நெடுநல்வாடை *(145-147)* சான்றுரைக்கிறது. மேலும், பட்டுத்துகிலின் ஓரங்களில் கொட்டைகள் முடியப்பெற்றக் கொட்டைக்கரைய அலங்கார பட்டாடைகளை அணிந்தனர் என்று பொருநராற்றுப்படை *(154, 155)* விளம்புகிறது. செல்வந்தர்கள் தங்கள் ஆடைகளில் கஞ்சியின் மூலம் விறைப்புத்தன்மையை ஊட்டியுள்ளனர். மகளிர் ஆடைகள் நன்கு தூயதாய் வெளுக்கப்பட்டு அதனூடே வாசமிக்க மலர்களின் இதழ்களை வைத்து நறுமணம் ஊட்டப்பட்டதை நெடுநல்வாடையும் *(134, 135)*, மதுரைக்காஞ்சியும் *(721)* இயம்புகின்றன.

"நுரை" என விரிந்த நுண்பூங்கலிங்கம், "புகை" விரிந்தன்ன பொங்கு துகில் என்று உடலுக்குப் பாரமில்லாத மெல்லிய ஆடைகளையும், இழை சென்ற வழி தெரிதலில்லாத நுண்மையான ஆடைகளையும், கலை வேலைப்பாடு கொண்ட ஆடைகளையும் பழந்தமிழர் அணிந்துள்ளனர். "ஆவி" போன்ற ஆடைகளைப்பெரும்பாணாற்றுப்படையும் *(468, 469)*, பாம்புத்தோல் போன்றும் பாம்புச்சட்டை போன்றும் ஆடைகள் இருந்தன என்பதைப் பொருநராற்றுப் படையும் *(83)* எடுத்துரைக்கின்றன.

பழந்தமிழர் சூழ்நிலைக்கேற்ப வண்ண ஆடைகளையும் அணிந்துள்ளனர். பெண்கள் பூப்பெய்திய போது சிவப்பு நிற ஆடைகளையும், கலவியின் போது வெண்மை நிற ஆடைகளையும் உடுத்தியுள்ளனர். பட்டினப் பாலை உரையாசிரியர் நச்சினார்க்கினியர், "பட்டு உடுத்துவற்றை நீக்கிப் புணர்ச்சிக் காலத்துக்கு நொய்யவாகிய வெள்ளியவற்றை உடுத்தும்" என்று கூறுகிறார். பக்தியின் பொருட்டுத் தெய்வத்தன்மை கொண்ட இந்திரகோபப்புழு (வெல்வெட் பூச்சி) போன்ற சிவந்த பூத்தொழிலையுடைய துகிலினைச் சுரர மகளிர் அணிந்தனர் என்று திருமுருகாற்றுப்படை *(15)* விளம்புகிறது.

விலையேறப்பெற்றக் கரையில்லா அக ஆடை

புற ஆடை மட்டுமின்றி அக ஆடையும் மிக முக்கியம் என்று பழந்தமிழர் வலியுறுத்தியுள்ளனர். புறந்தூய்மை நீரால் அமையும், அகந்தூய்மை வாய்மையால் காணப்படும் என்றார் வள்ளுவர். அதுபோல குறிஞ்சிப்பாட்டில் கபிலர், புறத்தில் ஏற்பட்ட அழுக்கை நாம் போக்கிவிடலாம். ஆனால், அக ஆடையில் ஏற்பட்ட அழுக்கை எந்த முனிவராலும் போக்க முடியாது என்பதை,

"முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை
நேர் வரும் குறை கலம்கெடின் புணரும்
சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்
மாசு அறக் கழீஇ வயங்கு புகழ் நிறுத்தல்
ஆசு அறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை
எளிய என்னார்"

என்று கூறியுள்ளார். முத்து, மாணிக்கம், பொன் கொண்டு செய்த அணிகலன்களில் ஒரு குறை ஏற்படுமானால் அதைச் சீர் செய்துவிடலாம்.

ஆனால் சான்றாண்மை, பெருமை, ஒழுக்கத்தில் ஒரு குறை ஏற்படுமானால் அந்தக் குறையை நீக்கவே முடியாது என்று தெளிவுறுத்தியுள்ளார். அக ஆடையின் தூய்மைக்கு பழந்தமிழர் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தனர் என்பது இதன்மூலம் தெரிய வருகின்றது.

இருப்பிடம்

அணுவைப் பிளக்க முடியாது என்று உலகம் சொல்லிக் கொண்டிருந்த வேளையில், அணுவைப்பிளக்கமுடியும்என்றுபழந்தமிழ்ப் பாட்டி ஔவை பறைசாற்றினார். அவ்வாறே, அண்டத்தின் அணுக்கள் ஆடிக் கொண்டிருப்பதால் நடராஜரும் ஆடிக் கொண்டிருக்கிறார் என்றனர். இதனால், பூமியின் நிழல் ஓடிக் கொண்டிருக்கும் வேளையில் கட்டிடங்களுக்கு அடித்தளமிடக் கூடாது என்பதைப் பழந்தமிழர் உணர்ந்துள்ளனர்.

பூமியின் நிழல் சாயாது அதனுள்ளே அடங்கும் சித்திரை மாதம் 10-ஆம் நாள் முதல் 20-ஆம் நாள் வரை உள்ள ஒரு நாளில் அரண்மனைக் கட்டிடங்கள் கட்ட அஸ்திவாரமிட்டனர் என்று நெடுநல்வாடை (73-78) கூறுகிறது. நிழல் சாயாத வேளையில் அஸ்திவாரமிட்டால் கட்டிடமும் சாயாது நிலைத்து நிற்கும் என்று பழந்தமிழர் உணர்ந்தார்கள் போலும்.

தென்திசையிலிருந்து தென்றல் வரும். வடதிசையிலிருந்து நோயை உண்டாகும் வாடைக்காற்று வரும் என்பதை உணர்ந்த பழந்தமிழர் வசந்த காலத்தில் தென்திசைச் சாளரங்களைத் திறந்தும், குளிர்காலத்தில் வடதிசைச் சாளரங்களை மூடியும் வைத்தனர் என்பதை நெடுநல்வாடையும் (61-64), பட்டினப்பாலையும் (150-154) கூறுகின்றன. இயற்கையாகவே வெப்பக்கட்டுப்பாடு செய்த குளிரூட்டப்பெற்றக் காற்றோட்டமுள்ள குளு-குளு அறையில் பழந்தமிழர் வசித்துள்ளனர். இதனால், மலையைப் போன்று உயர்ந்து விளங்கும் மாடங்களைக் கட்டினர் என்று பட்டினப்பாலையும் (145), மதுரைக்காஞ்சியும் (501,502) குறிப்பிடுகின்றன. மேலும், நிலாக்காலங்களில் நிலவின் பயனைத் துய்க்க, வீட்டின் முற்றங்களில் ஆற்று மணல் பரப்பி நிலா முற்றங்களை அமைத்தனர் என்றும் நெடுநல்வாடை (99, 100) கூறுகிறது.

கருவறைக்குப் பாடம் புகட்டிய பள்ளியறை

அர்ச்சுனன் மகன் அபிமன்யு தாயின் வயிற்றில் கருவாக இருக்கும்போதே குருவாக இருந்து கிருஷ்ணர் போர்ப்பாடம் சொல்லிக் கொடுத்தார் என்று மகாபாரதம் கூறுகிறது. அதுபோல நெடுநல்வாடை (128-131) என்ற சங்க நூலில்,

"ஊட்டுறு பல்மயிர் விரைஇ வயமான்
வேட்டம் பொறித்து வியன்கட் கானத்து
முல்லைப் பல்போது உறழ பூ நிரைத்து
மெல்லிதின் விரிந்த சேக்கை"

என்று மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் கூறுகிறார். மன்னன் பாண்டியன் நெடுஞ்செழியன் படுக்கையறையில் அரசி கோப்பெருந்தேவி போர்த்திப் படுத்திருக்கும் போர்வையில் சிங்கம் ஒன்று வேட்டையாடும் காட்சியும் மேலும் பல வண்ண மலர்களும் ஓவியமாக வரையப்பட்டிருந்தன என்று மொழிந்துள்ளார். இதன்மூலம் அரசியின் கருவில் உருவாகும் மன்னனின் வாரிசு, சிங்கம் போன்று போர்ப்பயிற்சி உடையவனாகவும், தன் குடிமக்களுக்கு மலரைப் போன்று மென்மைக்குணம் கொண்டவனாகவும், எதிரிகளுக்கு அவன் சிம்ம சொப்பனமாகக் காணப்பட வேண்டும் என்பது கற்றுக் கொடுக்கும்பாடமாகஅரசிக்குப்போதிக்கப் பட்டுள்ளது. அதுமட்டுமில்லாமல் அரசன் குடும்பம் ஒரு மாதிரிக்குடும்பமாக இருக்கந வேண்டும் என்று பழந்தமிழர் கருதியுள்ளனர். இதனால்அரசன்அரசியைவிட்டுப்பிரிவதை மகாபெரிய இழிவாகக் கருதினர். எனவே, கோப்பெருந்தேவி படுத்திருக்கும் கட்டிலின் மேல்மெழுகுவழித்தமேற்கட்டியின்மீதுவான மண்டலங்களின் படங்களும் அதில் சந்திரனோடு நிலையாய் நின்ற உரோகிணி

நட்சத்திரத்தின் படம் வரையப்பட்டுள்ளது என்று நெடுநல்வாடை (153-163) கூறுகிறது. இதனால், அரசனும் அரசியும் சந்திரனும், உரோகிணி நட்சத்திரமும் போன்று எப்பொழுதும் இணைபிரியாது வாழ வேண்டும் என்பது வாழ்க்கைப் பாடமாகப் புகட்டப் பட்டுள்ளது. மேலும், அரசனும் அரசியும் நல்மனதுடன், இனிமையாக என்றென்றும் மணம் வீசிக் கொண்டிருக்க வேண்டும் என்பதை உணர்த்தும் முகமாகக் கோப்பெருந்தேவின் போர்வையில் நறுமணம் ஊட்டப்பட்டுள்ளது என்று நெடுநல்வாடை (135) கூறுகிறது. இப்படி அரசியின் பள்ளியறை ஒரு பள்ளிக்கூடமாகச் செயல்பட்டுள்ளது.

இவ்வாறு பழந்தமிழர், தங்கள் உணவு, உடை, இருப்பிடம் மூலம் பல நல்ல பாடங்களைக் கற்றுள்ளனர். செயற்கைத் தன்மை இல்லாமல் இயற்கையோடு இயைந்து வாழ்ந்துள்ளனர். நாமும் முன்னோர்களின் நல்வழியில் நடப்போமாக வாழ்க தமிழர் சமுதாயம் வளர்க அவர்கள் புகழ்.